

Long-Term Care Home Update

Community Newsletter

Lakeridge Health

**மார்ச்சு 2021**

## இணையம் வழியாக நடந்து முடிந்த திறந்த இல்லம் நிகழ்ச்சியின் சிறப்பு அம்சங்கள்

கழிந்த மார்ச்சு மாதம் 18ம் திகதி Lakeridge Health ஆரோக்கிய அமைப்பு இப்பகுதி வாழ் மக்களுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு, புதிதாக அமைக்கப்பட்டு வரும் நீண்டகாலப் பராமரிப்பு இல்லத்தினைக் காட்சிப்படுத்தும் ஒரு முயற்சியாக, Facebook Live இணைப்பு முறையில் இணையம் வழியான திறந்த இல்லம் (Open House) நிகழ்ச்சி ஒன்றினை நடாத்தி இருந்தது.

ஏஜாக்ஸ் மற்றும் டூறாம் பிரதேசங்களைச் சேர்ந்த ஏறத்தாழ 80 வதிவாளர்கள் இக்கலந்துரையாடலில் பங்குபற்றினர். Lakeridge Health, PCL Construction மற்றும் G architects நிறுவனங்களைச் சேர்ந்த நிர்வாகக் குழுவினர் இந்த பராமரிப்பு இல்லம் பற்றி, ஆரம்பம் முதல் முடிவு வரையிலான ஒரு விளக்க உரையை வழங்கினர்.

இக்கலந்துரையாடலின் பொழுது நடைபெற்ற சிறப்பு நிகழ்வு அம்சங்களில் இவையும் அடங்கி இருந்தன :

- இந்த இல்லத்தின் பல்வேறு தளங்களுக்கான திட்ட விபரங்கள் பற்றிய மேலோட்ட விவரணம்: பாதுகாப்பான அழகுபடுத்திய உலாவு முற்றங்கள், போக்குவரவு வசதிக்கான விசாலமான நடை கூடங்கள், சேர்ந்து வாழும் வதிவாளர்களுடனும் குடும்பத்தினருடனும் தொடர்பு கொண்டு உறவாட வசதியான சமூக வெற்றிடங்கள் போன்றவை இதில் அடங்கி இருந்தன.
- கிருமித் தொற்றினை தடுக்கவும் கட்டுப்படுத்தவும் (IPAC) ஏற்பாடாகி வரும் மேலான நடைமுறை விபரங்கள்: தூய்மையான மற்றும் அசுத்தமான பொருட்களை வெவ்வேறு வழிகளில் கொண்டு செல்லுதல், நோயின் திடீர்பரவலைக் கட்டுப்படுத்த இல்லத்தின் உள்ளேயே உருவாக்கப்பட்டு உள்ள 16 படுக்கை கொண்ட “கூட்டுத் தொகுதிகள்” ஆகியன அடங்கி இருந்தன.
- மாதத்துக்கு மாதம் இங்கு நடைபெறவுள்ள கட்டுமான செயல்திட்டம் மற்றும் இந்த ஸ்தலத்துக்கு வெளியே வேறு இடத்தில் உருவாக்கப்பட்டு வரும் இக்கட்டிடத்துக்கு உரிய துண்டுப் பகுதிகளின் காட்சி.
- பங்குபற்றினோர் மத்தியில் நிகழ்ச்சியின் பொழுது நடாத்தப்பட்ட ஒரு கருத்துக் கணிப்பு. இக்கணிப்பின்படி இவர்களில் 98% அளவினர் டூறாம் பிரதேசத்தில் மேலும் அதிகமான நீண்டகாலப் பராமரிப்பு இல்லங்கள் தேவை என்பதை ஏற்றுக் கொண்டனர்.




திறந்த இல்லம் நிகழ்ச்சியின் பொழுது ஒரு திரைத் தோற்றம்

## இணையம் வழியான திறந்த இல்லம் நிகழ்ச்சியில் பங்குபற்ற நீங்கள் தவறிவிட்டீர்களா?

இணையம் வழியாக நடைபெற்ற எமது திறந்த இல்லம் நிகழ்ச்சியில் நீங்கள் பங்குபற்றத் தவறியிருப்பின் இதன் ஒளிப் பதிவு ஒன்றினை எமது website. இணைப்புத் தளத்துக்குச் சென்று பார்வையிட முடியும். கிரமமான முறையில் புதுப்பித்த தகவலையும் எதிர்கால நிகழ்வுகள் பற்றிய மேலதிக விபரங்களையும் பெறுவதற்கு தயவு செய்து எமது இணையத் தளம் www.lh.ca சென்று பார்வையிடுங்கள்.

## விரைவாகத் தொடர்ந்து முன்னேறுகிறது கட்டுமானப் பணி

ஏஜாக்ஸ் பிக்கறிங் வைத்தியசாலைக்கு அருகாமையில் தற்பொழுது நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற Lakeridge Health ஆரோக்கிய அமைப்பின் புதிய நீண்ட காலப் பராமரிப்பு இல்லத்துக்கான கட்டுமான வேலை ஆரம்பமாகிச் சிறப்பாகத் தொடர்ந்து நடைபெறுகிறது. இவ்வருடம் பெப்ருவரி மற்றும் மார்ச்சு மாதங்கள் பூராகவும் கட்டுமானப் பணிக் குழுவினர் இந்த ஸ்தலத்துக்கு அவசியமாக உள்ள நீர் மற்றும் மின் வழங்கும் சேவைகளை நிறுவியுள்ளனர். மின்சார விநியோகம் மற்றும் டூறாம் பிரதேசத்துக்கான பிரதம நிலக்கீழ் மழைநீரோட்ட மற்றும் கழிவுநீர் குழாய்களுடன் செய்யப்படும் இணைப்புகள் ஆகியன இவற்றில் அடங்கும். இந்த மாதத்தின் ஆரம்பத்தில் இரண்டு பாரம் தூக்கிகளும் வேலை ஸ்தலத்துக்கு வந்துள்ளன. கட்டுமானப் பணிக் குழுவினர் தரைமட்டத் தளத்துக்கான சீமெந்துக் கலவையைக் கொட்டி நிரப்பி முடித்த பின், முதல் தளத்துக்குரிய சுவர்களை எழுப்ப ஆரம்பித்துள்ளனர்.

கட்டிட ஸ்தலத்தில் கட்டுமான வேலைக்கான பணிநேர மணித்தியாலங்கள் கணிசமான அளவு அதிகரித்து உள்ளன. அதிகூடிய வேலைக் காலத்தில் இத்திட்டத்தின் கீழ் தனியொரு சுழல் மாற்றத்தின் பொழுது, பணித்திறன் கொண்ட தொழிலாளர்கள் 300 இலும் அதிகமானோர் இங்கு பணியாற்றுவர். ஒரு நாளில் 600 இலும் அதிகமான பணித்திறனாளர்கள் மொத்தமாக இங்கு வேலை செய்வர். இதன்பிரகாரம் **தனியொரு நாளில் இங்கு நிறைவேற்றப்படும் வேலைக்கான உழைப்பு மணித்தியாலங்கள் 4,800 வரையில் இருக்கும்.** இது எமது சமூகத்துக்கும் இந்த மாகாணத்துக்கும் பொருளாதார ரீதியில் கணிசமான ஒரு உந்து வேகத்தைக் கொடுக்கிறது எனலாம்.

இவ்வருடம் மார்ச்சு மாதம் 22ஆம் திகதி தொடக்கம் வேலைத் தலப் பணியாளர் குழுக்கள், திங்கள் முதல் வெள்ளி வரை காலை 6:30 தொடக்கம் நள்ளிரவு வரையிலும், சனிக்கிழமைகளில் காலை 6:30 தொடக்கம் மாலை 5:00 வரையிலும் கடமையில் ஈடுபடுவர். இக்கட்டுமான ஸ்தலத்தில் நடைபெறும் கட்டிட வேலைக்கு மேலாக இதற்கு வெளியே உள்ள இன்னுமொரு இடத்திலும் கட்டிடத்துக்கு உரிய துண்டுப் பகுதிகள் வடிவமைக்கப்பட்டு வருகின்றன. எமது கட்டுமான வேலைப் பங்காளராக உள்ள PCL நிறுவனம் எமது கட்டிடத்துக்கு வேண்டிய பல்வேறு முன் உருவாக்கிய பாகங்களை வடிவாக்கம் செய்து அவற்றை நிறுவும் பணியினை மேற்பார்வை செய்து வருகிறது. சுமைதாங்கும் சுவர் வெட்டமைப்புத் தொகுதிகள், கழிவறைகளுக்கான நீர்வாய்கள் ஆகியவற்றுடன் பொறிமுறை மற்றும் மின்னியல் விநியோகத் தொகுதிகள் போன்றவை இவற்றில் அடங்கும்.

இம்மாதிரியான துண்டுப் பகுதிகளை இணைத்துச் செய்கின்ற கட்டிட வேலை மற்றும் தினந்தோறும் நிறைவேற்றப்படும் பாரிய எண்ணிக்கையிலான உழைப்பு மணித்தியாலங்கள் ஆகியவை, விரைவுபடுத்திய கட்டுமான முன்னோடித் திட்டத்தின் (Accelerated Build Pilot Program) ஒரு பகுதியாக இருக்கின்றன. இதன் மூலம் பாரம்பரிய முறையில் நீண்ட காலப் பராமரிப்பு இல்லக் கட்டிடம் அமைக்கும் வேகத்தைக் காட்டிலும் விரைவாக, புதிய பராமரிப்பு இல்லத்தை உருவாக்குவது சாத்தியமாகிறது. வேகமாகப் பணியாற்றுவதில் இங்கு உயர் கவனம் எடுக்கப்படுகின்ற அதேசமயத்தில், இங்கு வேலை செய்யும் சகல நிர்வாகப் பணியாளர்களும் கட்டுமானத் தொழிலாளர்களும் ஆரோக்கியம், பாதுகாப்பு மற்றும் கட்டமைப்பு ஆகியவற்றுக்கான நியமங்களை மிகத் தீவிரமாகப் பின்பற்றி வருகின்றனர் என்பதும் உறுதி செய்யப்பட்டு வருகிறது.

## வாகனத் தரிப்பிடம் கட்டுமானப் பணி ஆரம்பிக்க உள்ளது

இனிவரும் கட்டிட அமைப்பு ஏற்பாடுகளின்படி, பராமரிப்பு இல்லத்திற்கான வாகனத் தரிப்பிடம் மற்றும் உட்புற வீதி வலையமைப்பு ஆகியனவற்றின் கட்டுமானம் மார்ச்சு மாத முடிவு /ஏப்பிரல் மாத ஆரம்பம் காலத்தில் தொடங்குவதற்கு உள்ளது. புதிய இப்பராமரிப்பு இல்லத்தின் வருகையால் மேலதிகமாகக் குறைந்த பட்சம் 250 வாகனத் தரிப்பிட நிலைகள் தேவைப்படும் என்று கருதப்படுகிறது.

இவ்வாகனத் தரிப்பிடம் மற்றும் மீளமைக்கப்படும் வீதி வலையமைப்பு ஆகியவை அவசியமான வசதிகளாக உருவாக்கம் அடையும் பொழுது, Ajax Pickering Hospital வைத்திய சாலைக்கு உள்ளேயும் சுற்றியுள்ள பகுதியிலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படும் வாகன எண்ணிக்கைக்கு ஈடுகொடுக்கக் கூடியனவாக இருக்கும். புதிய நீண்ட கால பராமரிப்பு இல்லம் மற்றும் வைத்தியசாலை ஆகிய இரண்டிற்கும் வருகின்ற நோயாளர்கள், வருகையாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கான இடவசதியையும் இவை பெருக்க முடியும்.

வாகனத் தரிப்பிடம் மற்றும் வீதிவலையமைப்பு ஆகியவற்றின் கட்டுமானப் பணியை முன்னெடுப்பதற்கு படிப்படியான கட்டமைப்பு ஏற்பாடு அவசியமாக உள்ளது. இதனால் உட்புறத்தில் உள்ள வீதி அமைப்பில் மாற்றங்களும் சில மரங்களை அகற்ற வேண்டிய தேவையும் ஏற்படும். இந்த முயற்சியை வழி நடத்துவதற்காக தகைமைச் சான்றிதழ் பெற்ற ஓர் உள்ளூர் மரவியல் நிபுணர் பணிக்கு அமர்த்தப்பட்டு இருக்கிறார். இவர் இங்குள்ள மரங்களில் எவையெல்லாம் பாதுகாக்கப்பட்டு பேணப்பட வேண்டும் என்பது பற்றி ஒரு பூரண மதிப்பீடு செய்வார். இவ்வாறான கட்டமைப்பு நிகழ்வதற்கு ஏற்றதாக ஏஜாக்ஸ் நகராட்சியினருடன் தொடர்பு கொண்டு ஆலோசனை மேற்கொள்ளப்பட்டு, அங்கீகார அனுமதிப் பத்திரங்களும் பெறப்பட்டன. இத்திட்டத்தினைத் தொடர்ந்து நாம் முன்னெடுக்கும் பொழுது, மேலதிகமாக வேறு மரங்கள் எவற்றுக்கும் பாதிப்பு ஏற்பட மாட்டாது.

சுற்றாடல் நிலைமைகளைத் தொடர்ந்து பேணுதல் மற்றும் சக்தியை செயற்திறனுடன் கையாளுதல் ஆகிய விடயங்களை தனது சேவைத் தொகுதி அனைத்திலும் முன்னெடுத்து உழைக்கும் ஒரு நீண்ட வரலாறு Lakeridge Health அமைப்புக்கு இருந்து வருகிறது. கட்டுமானப் பணி நிறைவேறிய பின் இப்பகுதிக்கு மேலும் மெருகூட்டும் புதிய மரங்களை நடுவதில் நாம் உறுதி பூண்டு இருக்கிறோம்.



## அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

ஒரு நீண்டகாலப் பராமரிப்பு இல்லம் அமைக்கும் எமது செயல்திட்டம் பற்றிய கேள்விகளுடனும் மீள்தரவாக அமையும் கருத்துக்களுடனும் எங்களை அணுகித் தொடர்பு பூண்டு வருகின்ற மக்களாகிய உங்கள் எல்லோருக்கும் எமது நன்றி. பொதுவாக உங்களால் கேட்கப்படும் சில கேள்விகளுக்கு இங்கு விடை தந்து இருக்கிறோம்:

**Q1. இப்பராமரிப்பு இல்லத்தின் அமைப்பு வேலைகள் எப்பொழுது பூர்த்தியாகும்?இங்கு எத்தனை வதிவாளர்களுக்கான படுக்கை வசதிகள் அடங்கி இருக்கும்?**

புதிதாக எழுகின்ற இந்த நீண்காலப் பராமரிப்பு இல்லம் Ajax Pickering Hospital அருகாமையில் Harwood Avenue South மற்றும் Clements Road West ஆகியன குறுக்கிடும் சந்தியின் வடமேற்கு மூலையில் அமைந்து உள்ளது. இதற்கான கட்டுமான வேலை 2021ஆம் ஆண்டின் பிற்பகுதியில் முடிவுறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த பராமரிப்பு இல்லத்தில் 320 படுக்கைகளுக்கான இடவசதி அமைந்து இருக்கும்.

**Q2. நான் ஏஜாக்ஸ் நகரில் வசிக்கும் ஒருவராக இருந்தால் இப்புதிய பராமரிப்பு இல்லத்தில் ஓர் இடத்தைப் பெறுவதற்கு எனக்குக் கூடுதலான வாய்ப்பு இருக்குமா?**

இப்புதிய இல்லம் திறக்கப்படும் பொழுது, இந்த மாகாணம் அடங்கிலும் உள்ள எல்லா நீண்டகாலப் பராமரிப்பு இல்லங்களிலும் உள்ள படுக்கைகளுக்கு அனுமதி வழங்க உபயோகிக்கப்படும் மேலாண்மை முறையே பின்பற்றப்படும். மாகாண அரசினால் நிர்வகிக்கப்படும் ஓர் இடம் வழங்கும் செயல்முறையின் வழியாக ஒன்ராறியோ மாகாணத்தில் வசிக்கின்றவர்களாகவும் தகைமை உடையவர்களாகவும் உள்ள எல்லோருமே எந்தவொரு பராமரிப்பு இல்லத்துக்கும் விண்ணப்பிக்க முடியும்.
இந்த இடம் வழங்கும் செயல்முறையில் பல பரிசீலனைப் பகுதிகள் அடங்கி உள்ளன. இப்பகுதிகளில் ஒன்றின் பொழுது பராமரிப்பு ஒருங்கிணைப்பாளர் ஒருவர் சம்பந்தப்பட்ட நபருக்கு திருத்தமாகப் பதிவிட்ட ஒரு மருத்துவ வரலாறு இருக்கிறதா என்பதை உறுதி செய்வார். அத்துடன் நீண்டகாலப் பராமரிப்பு சேவையினைப் பெறும் தகைமை அந்த நபருக்கு இருக்கிறதா என்றும் தீர்மானம் செய்வார். பராமரிப்பு இல்லத்துக்கு அனுமதி பெறுதல் பற்றி மேலதிக தகவல் பெறுவதற்கு தயவு செய்து அழையுங்கள்: தொலைபேசி எண் 310-2222 (பிரதேசக் குறியீடு/ area code இதற்குத் தேவையில்லை)

**Q3. புதிதாக வருகின்ற நீண்டகாலப் பராமரிப்பு இல்லத்தில் நான் வேலை ஒன்று எடுப்பதற்கு எப்படி முயல வேண்டும்?**

வேலை வாய்ப்புகள் தோன்றும் பொழுது, சுற்றுச் சமூகத்தின் மத்தியில் அறிவிக்கப்படும். புதிய இல்லத்தில் பணியாளராகப் பங்குபற்ற எப்படி விண்ணப்பிக்கலாம் என்ற தகவலும் வழங்கப்படும்.

**Q4. புதிய நீண்டகால பராமரிப்பு இல்லத்துக்கு நான் ஒரு உற்பத்திப் பொருளை அல்லது சேவையை எப்படி வழங்கலாம்?**

முன்மொழியப்படும் உற்பத்திப் பொருள் அல்லது சேவையின் வகையினைப் பொறுத்து, எமது பொதுவகை ஒப்பந்தக் காரராக உள்ள PCL நிறுவனத்துடன் செய்துள்ள கட்டுமான ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாகப் பொருட்களைக் கொள்வனவு செய்தல் இருக்கும், அல்லது Lakeridge Health அமைப்பில் நடைமுறையில் உள்ள கொள்வனவுச் செயல்முறைகள் வழியாக அது நடைபெறும்.

Lakeridge Health அமைப்புக்கு பதிவு செய்யப்பட்ட ஒரு வியாபாரியாக இருக்க விரும்பினால் தயவு செய்து Plexxus, நிறுவனத்தில் பதிவு செய்து கொள்ளுங்கள். எமது கொள்வனவுப் பணி ஒருங்கிணைப்பாளராக இந்த நிறுவனம் உள்ளது.

**Q5. கட்டுமான ஸ்தலத்துக்குச் சமீபமாக வாழும் அயலவர்களுக்கு உண்டாகும் சத்தத்தின் அளவினை முடிந்த அளவு குறைப்பதற்கு என்ன செய்யப்படுகிறது?**

அயலிடப் பகுதியினருக்கு உண்டாகும் ஏதாவது சத்தம் அல்லது தாக்கத்தை முடிந்த அளவு குறைப்பதற்கு கட்டுமானப் பணிக் குழுவினர் தமது மிகச் சிறந்த முயற்சியை எடுத்து வருகின்றனர். சத்தம் தொடர்பிலான மாநகர சட்ட உபவிதிகளுக்கு அமைவாக நடப்பதற்கென்று PCL நிறுவனம் பல நடைமுறைத் திட்டங்களை நிறுவி உள்ளது:

- மண்புழுதியைக் கட்டுப்படுத்தல் உள்ளடங்கிய ஆரோக்கியம், பாதுகாப்பு, சுற்றாடல் தொடர்பிலான கரிசனங்கள் யாவும் பற்றி உரிய நடவடிக்கை எடுப்பதற்கான ஒரு திட்டம்.
- கட்டிடப் பொருட்களை ஸ்தலத்தில் தரையிறக்குதல் மற்றும் வாகனங்களை ஒரு புறமாக நிறுத்துதல் போன்ற தேவைகளுக்காக, கட்டிட ஸ்தலத்துக்கு இட்டுச் செல்லுகின்ற மற்றும் அதிலிருந்து வெளியேறும் பாதைகளில் வாகன நெருக்கடியை குறைக்க விசேட கட்டுப்பாடு.
- கட்டிட வேலையினால் விளையும் சத்தம் தொடர்பிலான சட்ட உபவிதிகளுக்கு அமைவாகச் செயற்படுவதற்குரிய திட்டங்கள்.

எமது சமூகத்துக்கு முக்கியமானதும் மிக அவசியமானதும் ஆகிய இந்த நீண்ட காலப் பராமரிப்பு இல்லத்தினை முடிந்த அளவு விரைவாக கட்டி முடிப்பதற்கு நாம் உழைத்து வருகின்ற இச்சமயத்தில், கட்டுமான ஸ்தலத்துக்கு மிகச் சமீபமாக வாழுகின்ற அயலிடப் பொதுமக்கள் காட்டி வந்துள்ள புரிந்துணர்வினை நாம் பெரிதும் மதிக்கிறோம்.

இக் கட்டிட அமைப்புத் திட்டத்தின் கால ஒதுக்கீட்டு அட்டவணை விரைவான ஒன்றாகவே இருக்கிறது. இதனால் இப்புதிய பராமரிப்பு இல்லத்தின் கட்டிட வேலை 2021 ஆண்டின் பிற்பகுதியில் முடிந்து விடும்.

## உங்களுக்குப் புதிய தகவல் வழங்குதல்

எமது பணியின் முன்னேற்றம் பற்றி நாங்கள் இச் செய்தி மடல் மூலமாகவும் எமது **இணையத்தளம்** website. வழியாகவும் உங்களுக்குத் தொடர்ந்து தகவல்களை வழங்கி வருவோம்.
எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் உங்களிடம் கேள்விகள் உண்டென்றால் அல்லது மேலதிக தகவல் தேவைப்பட்டால் தயவுசெய்து அழையுங்கள். தொலைபேசி எண்: 905-576-8711 தொடரெண் 34167 அல்லது மின்னஞ்சல் முகவரி AjaxLTC@lh.ca.
நீங்கள் எம்மை Twitter மற்றும் Facebook. வழியாகவும் பின்தொடர முடியும்

நாம் சமூகப் பெருமக்களிடம் புதிதாக வந்து சேரவுள்ள இந்த பராமரிப்பு இல்லம் தொடர்பாக நீங்கள் காட்டும் ஆர்வம் மற்றும் ஆதரவுக்கு நாம் நன்றி கூறுகிறோம்!